# இணைப்புச் சொற்கள்

1. ஜானுக்கு நாளை தேர்வு இருக்கிறது. **ஆனாலும்** அவன் திரைப்படம் பார்க்கச் சென்றான்.

2. எங்கள் ஊரில் போதுமான அளவு மழை பெய்யவில்லை. **ஆதலால்** குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

3. சலவை இயந்திரத்தின் விலை அதிகம். **ஆனாலும்** அதை வாங்க விரும்புவேன்.

4. எங்கள் வீட்டில் பூனை **மற்றும்** நாய் வளர்க்கின்றோம்.

5. அவன் சிறுவன்தான். **ஆனாலும்** திறமை மிக்கவன்.

6. மழை பெய்தது. **அதனால்** கால்பந்து போட்டி கைவிடப்பட்டது.

7. பள்ளி செல்வது அவனுக்கு மிகவும் பிடிக்கும். **எனவே** பள்ளி திறக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தான்.

8. குல்லாய் விற்பவர் தூங்கிக்கொண்டு இருந்தார். **எனவே** குரங்குகள் குல்லாய்களை எடுத்துக்கொண்டன.